RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-81 | 28 மார்ச் | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## குன்னூர் மார்க்கெட்டில் பெரும் தீ விபத்து: 15 கடைகள் -பல கோடி மதிப்பு பொருட்கள் சேதம்



குன்னூர், மார்ச்.28

குன்னூர் மார்க்கெட்டில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. இந்நிலையில், 15 கடைகள் எரிந்து, பல கோடி மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்தன.


குன்னூரில் நகராட்சிக்கு சொந்தமான 800க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. நேற்று இரவு 10 மணி அளவில் மார்க்கெட் பகுதியில் உள்ள துணிக்கடையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டு மள, மளவென காட்டு தீ போல் அருகே உள்ள கடைகளுக்கும் பரவியதால் வியாபாரிகளும், பொதுமக்களும் அதிர்ச்சி அடைந்து அங்கும், இங்கும் தலைத் தெறிக்க ஓடினர்.

உடனடியாக தீயணைப்புத் துறையினருக்கு தகவல் கொடுத்தவுடன் விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் தீயை கட்டுப்படுத்த முயற்சி மேற்கொண்டனர். இருப்பினும் தீ பற்றி எரிந்தது. இதனால் நகரப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதன் காரணமாக தண்ணீரை எடுத்து வர இயலாததால் தீயணைப்பு துறையினர் திண்டாடினர். பின்னர் உதகை, கோத்தகிரி மற்றும் அருவங்காடு வெடி மருந்து தொழிற்சாலை தீயணைப்பு நிலையங்களில் இருந்து வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீயை கட்டுப்படுத்த முயற்சி மேற்கொண்டனர்.

இருப்பினும் தண்ணீர் பற்றாக்குறையால் வாகனங்கள் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டு தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இதில் பெயிண்ட் கடையில் உள்ள பொருட்களால் தீ தொடர்ந்து கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்தவுடன் மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா, காவல்துறை கண்காணிப்பாளர் எஸ்.என். நிஷா, குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, நகராட்சி ஆணையர் இளம் பருதி, குன்னூர் டிஎஸ்பி ரவி, நகர மன்ற துணைத் தலைவர் வாசிம் ராஜா மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் ஜாகிர் உசேன், சையது மன்சூர் ஆகியோர் மீட்பு பணிகளை முடுக்கி விட்டனர்.

இந்த திடீர் தீ விபத்தில் துணி, பெயிண்ட், மளிகை கடைகள் என கடைகள் முற்றிலும் எரிந்து நாசமானது. இதில் பல கோடி மதிப்பிலான பொருட்களும் தீக்கிரையானது. இரவு நேரம் என்பதால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மவுண்ட்ரோடு பகுதியில் பெட்ரோல் பங்க் அருகே இந்த தீ விபத்து ஏற்பட்டதால் பதற்றம் ஏற்பட்டது. உள்ளூர்வாசிகளும், வியாபாரிகளும் அதிகளவில் குன்னூர் சப் டிவிஷன் மற்றும் உதகையில் இருந்து நூற்றுக்கணக்கான போலீஸார் வரவழைக்க வைக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## மத்திய அரசின் வக்பு சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிராக தமிழக சட்டப்பேரவையில் தனித் தீர்மானம்



சென்னை, மார்ச்.28

"சிறுபான்மையின இஸ்லாமியசமுதாயமக்களுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில், 1995 ம் ஆண்டின் வக்பு சட்டத்தை திருத்துவதற்கு, கடந்த 2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மத்திய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு வாரிய சட்டத்திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய அரசை இந்த பேரவை வலியுறுத்துகிறது" என்று சட்டப் பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசின் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசின் வக்பு சட்டத்திருத்தத்துக்கு எதிரான தனித்தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசியதாவது: "வேற்றுமையில் ஒற்றுமைகண்டு நாட்டுமக்கள் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு வாழும் நாடு இந்தியா. பல்வேறு இனங்கள், மொழிகள், மதங்கள், வழிபாட்டு நம்பிக்கைகள், பண்பாடுகள் இருப்பினும் அனைவரும் இந்திய நாட்டின் மக்கள் என்ற உண்மை உணர்வோடு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இத்தகைய நாட்டை ஆளும் அரசும், இத்தகைய உணர்வு கொண்ட அரசாகத்தான் செயல்பட வேண்டும்.

ஆனால், மத்தியில் பாஜக தலைமையிலான கூட்டணி அரசானது தனது செயல்பாடுகள் அனைத்தையும் ஒருவிதமான உள்நோக்கம் கொண்டதாக செய்து வருகிறது. எதை செய்தாலும், குறிப்பிட்டத் தரப்பை வஞ்சிக்கும் வகையில்தான் திட்டங்களைத் தீட்டுகிறார்கள். குடியுரிமைத் திருத்தச் சட்டமானது சிறுபான்மை இஸ்லாமிய மக்களையும் இலங்கைத் தமிழர்களையும் வஞ்சித்தது.

வக்பு சட்டமானது 1954 ம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தில் 1995, 2013 ஆகிய ஆண்டுகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதில் இன்றைய மத்திய பாஜக கூட்டணி அரசு சில திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான முன்வரவினை கடந்த 8.8.2024 அன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. வக்பு நிர்வாகத்தில் அரசியல் தலையீட்டை ஆதரிப்பதாகவும், மத உரிமைகளைப் பாதிப்பதாகவும், மத்திய அரசின் சட்டத்திருத்தங்கள் இருந்ததால், அதனை திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தோம்.

எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த நிலையில், நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வுக்கு இதனை அனுப்பினார்கள். இந்த சட்டத்தை நாம் எதிர்ப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. வக்பு சட்டத்தை திருத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகள் ஏற்படும். வக்பு சட்டத்தை மத்திய அரசு திருத்த நினைக்கிறது. இதன்மூலம் மத்திய வக்பு கவுன்சில் மற்றும் மாநில வக்பு வாரிய கட்டமைப்புகள் மாற்றப்பட்டு அரசின் கட்டுப்பாடு அதிகரிக்கிறது.

இது வக்பு நிறுவனங்களின் சுயாட்சியைப் பாதிக்கும். வக்பு நிலங்களை நில அளவை செய்யும் அதிகாரம், நில அளவையரிடம் இருந்து மாவட்ட ஆட்சியருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக வக்பு நிலங்கள் குறித்து முடிவு செய்யும் அதிகாரம் வக்பு வாரியத்திடம் இருந்து நீக்கப்பட்டுள்ளது. அரசு சொத்து என்று அடையாளம் காணப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட வக்பு சொத்து இந்த சட்டம் தொடங்குவதற்கு முன் அல்லது பின் என்றாலும் வக்பு சொத்தாக கருதப்படாது என்று இந்த சட்டம் கூறுகிறது.

இது அரசுக்கு சொத்துகளை மறுவகைப்படுத்தும் அதிகாரத்தை அளிக்கிறது. 5 ஆண்டுகளுக்கு குறையாமல் இஸ்லாத்தைப் பின்பற்றும் ஒரு நபர் மட்டும் வக்பு அறிவிக்க முடியும் என்று கட்டுப்படுத்துகிறது. இது முஸ்லிம் அல்லாதவர்களால் உருவாக்கப்பட்ட வக்பு சொத்துகளை செல்லாதவை என்று ஆக்கலாம் என்ற அச்சத்தை உருவாக்குகிறது. இஸ்லாமிய மக்களின் இரண்டு குறிப்பிட்ட வகுப்பினருக்கு தனி சொத்து வாரியம் உருவாக்க முயற்சி செய்கிறார்கள். மாநில வக்பு வாரிய உறுப்பினர்களுக்கும், தலைவருக்கும் தேர்தல் முறையானது ரத்து செய்யப்பட்டுள்ளது. மாநில வக்பு வாரியங்களில் இரண்டு முஸ்லிம் அல்லாத உறுப்பினர்களை, சேர்க்க வேண்டும் என்று இந்த சட்டம் கட்டாயப்படுத்துகிறது.

நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் முடிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதலும் வழங்கிவிட்டது. இந்நிலையில், வக்பு திருத்த சட்டமானது எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படலாம். இஸ்லாமிய மக்களை வஞ்சிக்கும் இந்த சட்டத்துக்கு எதிராக நமது எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டியது அவசிய அவசரமென்று நான் கருதுகிறேன். சிறுபான்மையின மக்களுக்கு எதிரான மதசுதந்திரத்தை நிராகரிக்கும், அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமான, வக்பு நோக்கத்துக்கு எதிரான, நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு முரணான, குழப்பமான, தேவையற்ற, பல்வேறு பிரிவுகள் வக்பு சட்டத் திருத்தத்தில் இருக்கின்றன.

இந்ததிருத்த சட்டமானது வக்பு அமைப்பையே காலப்போக்கில் செயல்படவிடாமல் முடக்கிவிடும். எனவே, நாம் இதனை எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மதநல்லிணக்கம், அனைவருக்குமான அரசியல் என்ற இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு நாம் இந்த தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம்: இந்திய திருநாட்டில் மதநல்லிணக்கத்துடன், அனைத்து மதங்களைச் சேர்ந்த மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். அனைத்து மக்களுக்கும் அவரவர் மதங்களைப் பின்பற்றுவதற்கு, அரசமைப்புச் சட்டம் உரிமை வழங்கியிருக்கிறது. அதைப் பேணிக் காக்கும் கடமை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் அமைப்புகளுக்கு உள்ளது. ஆனால், அதற்கு மாறாக சிறுபான்மையின இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில், 1995 ம் ஆண்டின் வக்பு சட்டத்தை திருத்துவதற்கு, கடந்த 2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மத்திய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு வாரிய சட்டத்திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய அரசை தமிழக சட்டப்பேரவை வலியுறுத்துகிறது," என்று முதல்வர் ஸ்டாலின் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

## கோடநாடு வழக்கு: ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் கோவை சிபிசிஐடி அலுவலகத்தில் ஆஜர்



கோவை, மார்ச்.28

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக, ஜெயலலிதாவின் முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன் கோவை சிபிசிஐடி போலீஸார் முன்பு இன்று (மார்ச் 27) விசாரணைக்கு ஆஜரானார்.

நீலகிரி மாவட்டம் கோடநாடு எஸ்டேட்டில் கடந்த 2017 ம் ஆண்டு கொள்ளைச் சம்பவம் நடந்தது. இதில், எஸ்டேட் காவலாளி ஓம்பகதூர் கொல்லப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக முதலில் உதகை போலீஸார் விசாரித்து சயான் உள்ளிட்ட 10 பேரை கைது செய்தனர். இவ்வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான கனகராஜ், சம்பவம் நடந்த சில நாட்களில் நடந்த சாலை விபத்தில் உயிரிழந்தார்.

பின்னர், இந்த வழக்கு மேற்கு மண்டல ஐஜி தலைமையிலான சிறப்பு விசாரணைக் குழுவுக்கு மாற்றப்பட்டது. அவர்கள் விசாரணை நடத்தினர். திமுக ஆட்சிக்கு வந்த பின்னர், இந்த வழக்கு கோவை மாவட்ட சிபிசிஐடி போலீஸாருக்கு மாற்றப்பட்டது. எஸ்.பி மாதவன், கூடுதல் எஸ்.பி முருகவேல் தலைமையிலான சிபிசிஐடி போலீஸார் கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கு தொடர்பாக முன்னரே கைது செய்யப்பட்டவர்கள், சந்தேகத்துக்குரியவர்கள், சாட்சிகள் உள்ளிட்டோருக்கு சம்மன் அனுப்பி போலீஸார் விசாரித்து வருகின்றனர். இதற்கிடையே, இவ்வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் விடுத்த கோரிக்கை, அது தொடர்பாக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதன் அடிப்படையில், சந்தேகத்துக்குரிய 18 பேரிடம் போலீஸார் சம்மன் அனுப்பி விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஜெயலலிதாவின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின், முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரனுக்கு 27ம் தேதி (நேற்று) விசாரணைக்கு ஆஜராகுமாறு சிபிசிஐடி போலீஸார் சம்மன் அனுப்பியிருந்தனர்.

அதனடிப்படையில் சுதாகரன் காந்திபுரத்தில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் இன்று விசாரணைக்கு ஆஜரானார். கோடநாடு எஸ்டேட் வாங்கப்பட்ட சமயத்தில், அதன் பங்குதாரர்களில் ஒருவராக, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன் இருந்தார். கோடநாடு எஸ்டேட்டில் இருந்த ஆவணங்கள், பொருட்கள் உள்ளிட்டவை தொடர்பாக அவரிடம் சிபிசிஐடி போலீஸார் விசாரிக்கின்றனர்.

## "அண்ணாமலை டெல்லி சென்றதற்கான காரணத்தை அவரிடம்தான் கேட்க வேண்டும்" - இபிஎஸ்



தூத்துக்குடி, மார்ச்.28

"அதிமுக தொண்டர்களின் கோயிலாக இருக்கும் தலைமைக்கழக அலுவலகத்தை ஓ.பன்னீர்செல்வம் என்று உடைத்தாரோ, அப்போதே, அவர் கட்சியில் இருப்பதற்கான தகுதியில்லாதவர் ஆகிவிட்டார். அதனடிப்படையில், அவரை கட்சியில் இணைத்துக் கொள்வதற்கு வாய்ப்பே கிடையாது" என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: "நேற்று முன்தினம் மத்திய உள்துறை அமைச்சரை சந்தித்து, தமிழகத்தின் பல்வேறு திட்டங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகைகளை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை மனு அளித்திருக்கிறேன். நூறுநாள் வேலைத்திட்டத்துக்கு மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வரவேண்டிய நிதி தாமதப்படுகிறது. எனவே, அதை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை மனுவாக கொடுத்திருக்கிறேன்.

எஸ்எஸ்ஏ கல்வித் திட்டத்துக்கு வரவேண்டிய நிலுவைத் தொகையை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருக்கிறேன். தமிழகத்தில் இருமொழிக் கொள்கைத் தொடர வேண்டும் என்பது அதிமுகவின் கொள்கை, நிலைப்பாடு. அதுவே தொடர வேண்டும் என்பதையும் எங்களது கோரிக்கை மனுவில் வலியுறுத்தியிருக்கிறோம்.

கட்சியில் ஓபிஎஸ் ஐ இணைப்பதற்கு சாத்தியமே கிடையாது. பிரிந்தது, பிரிந்ததுதான். பிரிந்தது மட்டுமல்ல, அதிமுகவை எதிரிகளிடம் அடமானம் வைப்பதை எங்களால் தாங்க முடியவில்லை. அண்ணாமலை டெல்லி சென்றதற்கான காரணத்தை அவரிடம்தான் கேட்க வேண்டும். மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறார்கள். இலங்கை கடற்படை திட்டமிட்டு தமிழக மீனவர்களைத் தாக்கி, படகுகளை சேதப்படுத்தி, மீன்களை கொள்ளையடிப்பது கண்டனத்துக்குரியது.

2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் 11 மாத காலம் இருக்கிறது. 11 மாதங்களுக்கு முன்பு எந்த செய்தி சொன்னாலும் அது நிலைக்காது. எனவே, கூட்டணி அமைக்கும்போது, ஊடகங்களையும், செய்தியாளர்களையும் அழைத்து தெரிவிப்போம். தேர்தல் நெருங்கும் நேரத்தில் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடைபெறும். அப்படி நடக்கும்போது முழுமையான தகவல் கொடுக்கப்படும்.

அதிமுகவைப் பொருத்தவரை, திமுகவைத் தவிர மற்ற எந்தக்கட்சியும் எங்களுக்கு எதிரி இல்லை. தேர்தல் நேரத்தில், ஒத்தக் கருத்துடைய கட்சிகள் யாரெல்லாம் எங்களோடு இணைகிறார்களோ அவர்களை எல்லாம் நாங்கள் சேர்த்துக்கொள்வோம். ஆட்சியைப் பிடிப்பதற்கு தேவையான இடங்களைவிட கூடுதல் இடங்களில் அதிமுக வெற்றி பெறும்.

தமிழகத்தில் மோசமான ஆட்சி நடைபெறுகிறது. போதைப் பொருட்கள் நடமாட்டத்துக்கு அளவே இல்லை. குற்றச்செயல்களில் ஈடுபடுகிறவர்கள் காவல்துறைக்கு பயப்படுவதே இல்லை. சர்வசாதாரணமாக கொலைகள் நடக்கிறது. இதை தடுத்து நிறுத்த திறமையற்ற அரசுதான், ஆளும் திமுக அரசு" என்று அவர் கூறினார்.

## மீனவர்கள் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண இருதரப்பு பேச்சுவார்த்தை: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, மார்ச்.28

தமிழக மீனவர்கள் மேலும் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண இருதரப்பு மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "வங்கக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம், தங்கச்சி மடம், பாம்பன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 11 மீனவர்களை அவர்களின் விசைப்படகுடன் இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை முடக்கும் நோக்குடன் இலங்கைப் படையினர் தொடர்ந்து நடத்தி வரும் அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

தமிழக மீனவர்கள் இலங்கைப் படையினரால் கைது செய்யப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. கைது செய்யப்பட்ட மீனவர்களை எந்த நிபந்தனையும் இல்லாமல் விடுதலை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்த இலங்கை அரசு, அண்மைக்காலமாக மீனவர்களுக்கு கோடிக்கணக்கில் அபராதம் விதிப்பதையும், ஆண்டுக்கணக்கில் சிறை தண்டனை விதிப்பதையும் வாடிக்கையாக்கிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு அக்டோபர் 29ம் தேதி கொழும்பில் நடைபெற்ற இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளின் மீனவர்கள் நலனுக்கான கூட்டுப் பணிக்குழு கூட்டத்தில் மீனவர்கள் கைது செய்யப்படுவது அவர்களின் வாழ்வாதாரம் சம்பந்தப்பட்டது என்பதால் இந்த சிக்கலை மனித நேயத்துடன் அணுக வேண்டும்.

இந்தியா இலங்கை இடையிலான கடல் பரப்பின் அளவைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது இரு தரப்பு மீனவர்களும் எல்லை தாண்டாமல் மீன் பிடிப்பது சாத்தியம் இல்லை என்பது தான் எதார்த்தம். இதை இலங்கை அரசுக்கு இந்தியா புரிய வைக்க வேண்டும். தமிழக மீனவர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைககளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் இரு தரப்பு மீனவர்களுக்கு இடையே பேச்சு நடத்த மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## நேரடித் தாக்குதல்: வாகன இறக்குமதிக்கான ட்ரம்பின் 25% வரி குறித்து உலக நாடுகள் எதிர்வினை



வாஷிங்டன், மார்ச்.28

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் அதன் முக்கிய உதிரி பாகங்களுக்கு நிரந்தரமாக 25 சதவீதம் கட்டணம் விதிக்கப்படும் என்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் அறிவிப்புக்கு உலக நாடுகள் கடுமையாக எதிர்வினையாற்றியுள்ளன. இது மிகவும் நேரடியான தாக்குதல் என்றும் சாடியுள்ளன.

அமெரிக்காவில் மீண்டும் உற்பத்தித்துறை சார்ந்த வேலைவாய்ப்புகளை கொண்டுவரும் முயற்சியாக அந்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு 25 சதவீதம் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும் என்று அதிபர் ட்ரம்ப் புதன்கிழமை அறிவித்திருந்தார். தனது புதிய வர்த்தக நடவடிக்கை நிரந்தரமானது, இது வரி வருவாயை அதிகரித்து, உற்பத்தித்துறை சார்ந்த வேலைகளை நாட்டில் அதிகப்படுத்தும் என்று தான் நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார். இதனிடையே அமெரிக்காவின் வெள்ளை மாளிகையும், "இந்தக் கூடுதல் கட்டணம், முழுவதும் அசெம்பிள் செய்யப்பட்ட வாகனங்களுக்கு பொருந்தும் மற்றும் வாகன இஞ்சின்கள், டிரான்ஸ்மிசன்கள், பவர்ட்ரெயின் பாகங்கள் மற்றும் மின்னணு உதிரி பாகங்கள் உள்ளிட்ட முக்கியமான உதிரிபாகங்களுக்கும் பொருந்தும். இந்த பட்டியல் எதிர்காலத்தில் அதிகரிக்கலாம்" என்று தெரிவித்திருந்தது. ட்ரம்பின் இந்த அறிவிப்புக்கு உலக நாடுகள் கடுமையாக எதிர்வினையாற்றியுள்ளன.




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அடுத்த பார்வதிபுரம்,ஐயப்பன் கோவில் முன்பு நேற்று அதிகாலை அவ்வழியாக வந்த சொகுசு கார் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து விபத்து அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் ஏற்படவில்லை,கார் டிரைவர் தூக்க மயக்கத்தில் இருந்ததால் விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கிராம இயற்கை சந்தையினை துவக்கி வைத்த ஆட்சியர்

விருதுநகர் மார்ச் 28

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், நாலூர் ஊராட்சியில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் "கிராம இயற்கை சந்தை"யினை மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் துவக்கி வைத்தார்.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

விருதுநகர் மாவட்டத்தில், நாலூர் ஊராட்சியில், இயங்காமல் இருந்த சந்தை மற்றும் கடைகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இந்த பகுதியினுடைய மகளிர் சுயஉதவி குழுக்களுக்கள் மூலம் பல்வேறு கடைகளாக தொழிலை செய்யக்கூடிய இடங்களாகவும், காய்கறிகள் உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருட்களை விற்கக்கூடிய இடங்களாக மாற்றி இந்த சந்தை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் திறந்த வெளியில் சந்தை என்பது இல்லை. இந்த சந்தையினை பொருட்களை வாங்கக்கூடிய, பல்வேறு பொருட்கள் கிடைக்கக்கூடிய ஒரு இடமாக மாற்றினால் நிச்சயமாக லாபம் தரக்கூடிய இடமாக மாறும்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள பெண்கள்; குழுவாக சேர்ந்து, செயல்படுவதன் முக்கியத்துவம் என்னவென்றால் ஒரு செயலை தனியாக செயல்படுத்துவது கடினம். அதுவே ஒரு குழுவாக சேர்ந்த செயல்படும் பொழுதுதான் வலிமை பெறுகிறது.

குறிப்பாக குழுவாக செயல்படுவதன் மூலம் பொருளாதார வாய்ப்புகள் கிடைக்கின்றன. பெண்களுக்கான முழுமையான விடுதலை, சுதந்திரம், வலிமை என்பது அவர்களுக்கான பொருளாதாரம் தான்.

பெண்களுக்கான பொருளாதார வலிமை எப்போது நிறைவடைகிறது என்றால் கையில் பணம் இருக்கும் பொழுது, நல்ல வேலைக்கு சென்று சம்பாதிக்கும் போது, நல்ல தொழிலை செய்து வியாபாரத்தில் இலாபம் சம்பாதிக்கும் பொழுது, அவர்கள் சுய தொழில் மூலம் வருமானம் பெறும் பொழுது தான் பொருளாதாரம் வலிமை யாகும். அந்த வகையில் பெண்களுக் கான பொருளாதார வலிமையை உருவாக்குவதற்காக, தமிழ் நாடு அரசு பல்வேறு திட்டங் களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

அரசின் மூலம் செயல்படுத்தப் பட்டு வரும் திட்டங்களை பெற்று, பொறுமையுடனும் தொடர்ச்சியான செயல்பாடு களுடனும் இருந்தால் நிச்சயமாக கிராமப்பகுதியில் இருக்கக்கூடிய பெண்கள் மகளிர் சுய உதவிக்குழுக் களைச் சேர்ந்த பெண்கள் எல்லாம் மிகப்பெரிய பொருளாதார வலிமையை அடைய முடியும்.

பெண்களுக்கான சுய உதவிக்குழுக்களுக்கு அரசால் மானியம் வழங்கப்படுகிறது. அதன் மூலம் பெண்கள் 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரை சுய உதவி குழுக்கள் கடன்களை பெற்று சரியான முறையில் சுய தொழில்களை செய்து வருமானம் ஈட்டக்கூடிய தன்னம்பிக்கை மிக்கவர்களாக சமுதாயத்தில் உருவாகி வருகின்றனர்.

எனவே இது போன்ற அரசினுடைய திட்டங்கள் மற்றும் அரசு வழங்கும் கடனுதவிகளை பெற்று முறையாக செயல் படுத்தி பெண்கள் தங்களுக் கான பொருளாதார வலிமையை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

இந்த பகுதியில்; சந்தையை பயன்படுத்தி இன்னும் ஒரு ஆண்டுகாலத்திற்குள் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் பொருளாதாரத்தில் வலிமை பெற்றவர்களாக ஆகவேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம்) ஜே.ஜார்ஜ் மைக்கேல், உதவித் திட்ட அலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த பெண்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஆர்.எஸ்.மங்கலத்தில் அரசு பொது தேர்வு எழுதும் மாணவ மாணவிகளுக்கு பள்ளி ஆசிரியர்கள் அறிவுரை




இராமநாதபுரம், மார்ச்.28

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா சனவேலி அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு எழுத இருக்கும் மாணவ மாணவிகளுக்கு தேர்வரை மற்றும் தேர்வு நேரங்களில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்தும் தேர்வு எழுத செல்லும் போது விழிப்புணர்வோடு பாதுகாப்பாக சென்று வர வேண்டும் எனவும் பள்ளியின் தலைமை ஆசிரியர் பகவதி குமார் தலைமையில் அனைத்து




ஆசிரியர்களும் மாணவ மாணவிகளுக்கு அறிவுரை வழங்கி தேர்வில் அனைவரும் வெற்றி பெற வேண்டும் என வாழ்த்துக்கள் கூறி தேர்வு எழுத தேவையான எழுதுகோல் உள்ளிட்ட உபகணங்கள் மாணவ மாணவிகளுக்கு வழங் கினார்.இந்நிகழ்வில் பள்ளி யின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## போடிநாயக்கனூர் நகர் நலச் சங்கம் செயற்குழு கூட்டம்

போடிநாயக்கனூர், மார்ச்.28

தேனி மாவட்டம் போடி நாயக்கனூர் வர்த்தக சங்கம் தனியார் திருமண மண்டபத்தில் போடிநாயக்கனூர் நகர் நலச் சங்கம் செயற்குழு கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் 38 சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டோர் கலந்து கொண்டனர்.




போடி நகர் நலன் கருதி 21 தீர்மானங்கள் எடுக்கப் பட்டுள்ளன அதில் ஏழை எளிய பெண்களுக்கு திருமண உதவியாக சீர்வரிசை பொருள்களும் வழங்குவ தாகவும் அரசு துறையில் ஆதிக்க சக்தி செலுத்தும் அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கும் என பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் வருகை புரிந்துள்ள அனைவருக்கும் அருள்மிகு பரமசிவன் திருக் கோவில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா அழைப்பிதழும் மற்றும் பொன்னாடை போற்றி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி போடிநாயக் கனூர் நகர் நலச் சங்கம் தலைவர் வடமலை ராஜையபாண்டியன் தலைமையிலும், செயலாளர். பாண்டியன், பொருளாளர் .நடராஜ், துணைத் தலைவர்கள் . செண்பகராஜன் மற்றும் .ராமகிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் .தங்கப்பா மற்றும் . முருகன், சட்ட ஆலோசகர் .பாலமுருகன் மற்றும் முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர்கள் இந்நிகழ்ச்சில் கலந்து கொண்டனர்.

## திருவாடானையில் இருந்து ஆனந்தூருக்கு கூடுதலாக இரண்டு அரசு பேருந்து இயக்க மாணவர்கள் கோரிக்கை

திருவாடானை.மார்ச்28

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானையில் இருந்து கற்காத்தக்குடி,மேல்பனையூர் ,நத்தக்கோட்டை,கூடலூர், ஆயங்குடி வழியாக ஆனந்தூர் பேருந்து நிலையத்திற்கு காந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே ஒரு அரசு பேருந்து மட்டுமே இயக்கப்பட்டு வருகின்றன இந்த பேருந்தில் பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் பணிக்கு செல்வோர் தினசரி சென்று வருகின்றனர்



50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் வசிக்கும் இந்த பகுதியில் கூடுதல் பேருந்து வசதி கூடுதலாக இல்லாததால் நாளுக்கு நாள் பள்ளி கல்லூரி மாணவர்கள் முதியோர்கள் பணிக்கு செல்வோர் பேருந்தில் கூட்ட நெரிசலில் சிக்கி தவிக்கும் நிலை தொடர் கதையாக உள்ளன எனவே பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு போர்க்கால அடிப்படையில் திருவாடானையில் இருந்து ஆனந்தூர் பேருந்து நிலையம் வரை கூடுதலாக இரண்டு அரசு பேருந்து இயக்க துறை சார்ந்த அமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாணவ மாணவியர் மற்றும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காத்து இருந்து பார்ப்போம் தினசரி கூட்ட நெரிசலில் சிக்கி தவிக்கும் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர் மற்றும் பயணிகள் நலனை கருத்தில் கொண்டு கூடுதலாக இரண்டு அரசு பேருந்து இயக்க மாணவர்கள் மற்றும் பயணிகளின் கோரிக்கையை ஏற்று துறை சார்ந்த அமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

## தாராபுரம் மகாராணி கலை கல்லூரில் தமிழ்நாடு மாநில கல்லூரி பேச்சுப்போட்டி

திருப்பூர் மார்ச்28

திருப்பூர் மாவட்டம்.தாராபுரம் மகாராணி கலை கல்லூரில் தமிழ்நாடு மாநில கல்லூரி பேச்சுப்போட்டியை துவக்கி வைத்து உரையாற்றினார்கள்.




திரைசிங்சன் ஆங்கில இதழ் ஆசிரியர் ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்கள் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் கடந்த (26.03.2025) அன்று திருப்பூர் மாவட்டம், தாராபுரம் மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான பேச்சுப்போட்டியை துவக்கி வைத்து உரையாற்றினார்கள்.

"சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய தத்துவங்களின் அடிப்படையில் தான் தமிழகம் பயணிக்க வேண்டும். தமிழகத்தின் வளர்ச்சி என்பது சமூகத்தின் வளர்ச்சியாக, வாழ்க்கை வளர்ச்சியாக, சிந்தனை வளர்ச்சியாக, பண்பாட்டு வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்றும் நான் விரும்புகின்றேன். பொருளாதாரம், கல்வி, சமூகம், சிந்தனை, செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளர வேண்டும். அதுதான் நான் கனவு காணும் வளர்ச்சி, அதற்கு உங்கள் வழிகாட்டுதல்கள் தேவை' என்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொன்மொழிக்கிணங்க, ஒன்றே குலம், ஒருவனே தேவன், மனிதநேயம் ஓங்கட்டும்! மதவெறி நீங்கட்டும், மக்களாட்சியின் மாண்பும் மதச்சார்பற்ற அரசும், ஏன் வேண்டும் இடஒதுக்கீடு?, இந்திய சமூகநீதி வரலாற்றில் தமிழ்நாட்டின் பங்கு!, சதிக்கு கால் முளைத்து சாதியானது!, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமகால ஜனநாயகம் எதிர்கொள்ளும் சவால்கள், விடுதலைப் போரில் தமிழர்களின் பங்கு, தமிழர்களாய் உயர்வோம்! தலைநிமிர்ந்து நிற்போம்! என்ற தமிழ் போட்டிக்கான தலைப்புகளிலும் பேச்சுப்போட்டிகள் துவக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் எ.வி.கல்பனா, பேச்சுப்போட்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மு.ஜெயக்குமார், ப.கனக ராசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## மறைமலைநகர் ரயில்வே நிர்வாகத்தை கண்டித்து பாமக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

காட்டாங்குளத்தூர் மார்ச் 28

மறைமலைநகர் ரயில்வே நிர்வாகத்தை கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் பாட்டாளி மக்கள் கட்சியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது



செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ரயில்வே கேட் பகுதியில் 2000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர் இந்த ரயில்வே கேட்டில் சாலை குண்டும் குழியும் மாக இருப்பதால் இப்பகுதியில் அத்தியவாசிய பொருள் வாங்க பணிக்கு செல்லவும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாகனத்திலும் நடைபயணமாகவும் பயணம் செய்கிறார்கள் இடத்தில் சரிவர கேட்ட கடக்க முடியாமல் விபத்துக்கள் நடப்பதாகவும் கை கால் அடிபட்டு எலும்பு முறிவு பெண்கள் கர்ப்பிணி பெண்கள் என விபத்துக்குள் சிக்கி அவதிப்பட்டு வருகின்றனர் இந்த ரயில்வே கேட்பகுதியில் இருப்பதால் வாகன தடுமாறி விபத்து ஏற்பட்டு எலும்பு முறிவு மற்றும் பல்வேறு விபத்துக்கள் தினசரி நடைபெற்று வருவதாகவும் ரயில்வே நிர்வாகத்திடம் பலமுறை புகார் அளித்தும் ரயில்வே நிர்வாகம் எந்த ஒரு நடவடிக்கை எடுக்காமல் அலட்சியப் போக்குடன் செயல்பட்டு வருவதால் பாட்டாளி மக்கள் கட்சியின் மறைமலைநகர் நகர செயலாளர் தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக மாநில வன்னியர் சங்க செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் திருக்கச்சூர் ஆறுமுகம் மாவட்ட செயலாளர் காயார் ஏழுமலை மறை மலைநகர் ரயில்வே நிர்வா கத்தை கண்டித்து மாபெரும் கண்டன கோஷங்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் உடனடியாக ரயில்வே கேட்டு அமைந்துள்ள இடத்தில் பொதுமக்கள் ரயில்வே கேட்டை பொதுமக்கள் எளிய முறையில் கடக்க விபத்து ஏற்படாத வண்ணம் சரி செய்ய வேண்டும் எனவும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மறைமலை ரயில்வே நிர்வகத்தை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினார்கள் இந்நிகழ்ச்சியில் பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்டத் துணைத் தலைவர் சுப்பிரமணியன், பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் சண்முகம், மாவட்ட பசுமைத்தாயக செயலாளர் செந்தில் நாத் கமலக்கண்ணன் மாநில செயற்குழு உறுப்பினர் காயரம்பேடு தேவராஜ் , பாட் டாளி மக்கள் கட்சியின் பொருளாளர் செல்வி கிருஷ்ண மூர்த்தி, மறைமலைநகர் நகர செயலாளர் ஹரி கிருஷ்ணன் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய நகர கிளைக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் மறைமலை ரயில்வே நிர்வாகத்தை கண்டித்து மாபெரும் கண்டன கோஷங்களை எழுப்பி பின்னர் காட்டாங்குளத்தூர் ரயில்வே கேட் மேம்பாலம் அமைத்து தரக் கூறியும் கேட் என் ரீ ரீ 45 சாமியார் கேட்டு அப்பகுதியிலும் மேம்பாலம் அமைத்தரக்கோரியம் ரீரீ 46 மாமரத்துக்கு கேட் என் எல் ஜி 48 திருத்தேரி கேட் மேம்பாலம் தரக்கூறியும் கோரிக்கை வைத்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்..

## அந்த தியாகி யார் போஸ்டரால் பரபரப்பு




அதிமுக சார்பில் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் சுவரொட்டி மூலமாக இந்த கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. டாஸ்மாக் ஊழல்பாட்டிலுக்கு 10ரூபாய்,விற்பனையில் 1000கோடி, உரிமம் வராத பார்கள் மூலம்40,000 கோடி ஊழலா என மக்கள் கேள்வி 1000 ரூபாய் கொடுப்பது போல கொடுத்து 1000 கோடி ரூபாய் அமுக்கிய அந்த தியாகி யார்? என ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## தேனி அருகே வீரபாண்டி கௌமாரியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு ராட்டினம் அமைக்க ரூ.3 கோடிக்கு ஏலம்

தேனி மார்ச் 28

தேனி மாவட்டம் வீரபாண்டியில் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான கௌமாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவில் திருவிழாவை ஒவ்வொரு வருடமும் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். வருகின்ற ஏப்ரல் 14 ஆம் நாள் கொடியேற்றத்துடன் துவங்குகிறது.



அதனைத் தொடர்ந்து மே 6 முதல் 17 ஆம் தேதி வரை திருவிழா நடைபெறும் இங்கு ஏராளமான பக்தர்கள் தீச்சட்டி,பால்குடம் எடுத்தல், கண் மாவிளக்கு, சேத்தாளி வேஷம் போன்றவைகளை நேர்த்திக்கடன் செய்வது வழக்கம். இந்த திருவிழாவில் தேனி மாவட்டம் மட்டும் அல்லாமல் திண்டுக்கல், மதுரை, விருதுநகர் மற்றும் அண்டை மாநிலமான கேரளா பகுதியிலிருந்தும் அதிக பக்தர்கள் வருவது வழக்கம். இங்கு ராட்டினங்கள் உள்பட பொழுதுபோக்கு மையங்கள் அமைக்க கடந்த 6 ஆம் தேதி நடந்தது. ஏலத்தொகை அதிகமாக இருப்பதால் யாரும் ஏலம் எடுக்க முன் வரவில்லை. இதனால் தள்ளிப்போன ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. ராட்டினம் போன்ற பொழுதுபோக்கு மையம் அமைக்க இணை இயக்குனர் கார்த்திக் தலைமையில் நடந்தது. ரூ.3 கோடியே 6 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது. இதில் இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் கார்த்திகேயன், கோவில் செயல் அலுவலர் நாராயணி, மேலாளர் பால சுப்பிரமணியன், கணக்காளர் பழனியப்பன் மற்றும் அலுவலக பணியாளர்கள் உள்பட கலந்து கொண்டனர். கடந்த ஆண்டு ரூ.2கோடியே 55 லட்சத்து 40 ஆயிரத்துக்கு ஏலம் விடப்பட்டது,

## காளையார் கோவிலில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்! சிவகங்கை ஆட்சியர் அறிவிப்பு

காளையார் கோவில் மார்ச் 28

சிவகங்கை மாவட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம் வருகின்ற 16.04.2025 அன்று காளையார்கோவில் வட்டத்தில் நடைபெறவுள்ளதையொட்டி, வருகின்ற 01.04.2025 முதல் 14.04.2025 வரை



காளையார்கோவில் வட்டத்திற்குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில், பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை அளிக்கலாம் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.

அரசாணை (நிலை) எண்:22 நாள்:29.01.2024ன் படி மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து மாவட்ட அலுவலர்களும் வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு 2025 ஆம் ஆண்டிற்கு சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டத்தில் வருகின்ற 16.04.2025 அன்று "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டம் நடைபெற உள்ளதால் துறை அலுவலர்கள் பொதுமக்களிடம் வந்து மனுக்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

இருப்பினும், பொதுமக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை நேரில் கொடுக்க விரும்பினால் வருகின்ற 01.04.2025 முதல் 14.04.2025 வரையிலான அரசு அலுவலக நாட்களில் காளையார்கோவில் வட்டத்திற்குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.





சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மடப்புரத்தில் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து மகளிர் குழு தலைவிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் பாலசுப்பிரமணியம் தலைமையில் பயிற்சி நடைபெற்றது. கூட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ராமச்சந்திரன் மற்றும் சட்டம் சார்ந்த நன்னடத்தை அலுவலர் மணிமேகலை,மாவட்ட வளப் பயிற்றுநர் அனிதா, வழக்கறிஞர் பாலமுருகன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு சமூக பணியாளர் சத்தியமூர்த்தி ஏற்பாடு செய்திருந்தார்.

## கடத்தல் வழக்கில் சிறப்பாக செயலாற்றிய காவலர்களை பாராட்டிய தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குனர்



மதுரை மார்ச் 28

மதுரை மாநகர தல்லாகுளம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட தமுக்கம் பகுதியில் பணம் கொடுக்க வேண்டிய தகராறில் இராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூரைச் சேர்ந்த வழக்கறிஞர் செந்தில் வேல் (32) மற்றும் அவருடைய டிரைவர் லட்சுமணன் ஆகியோரை அதே ஊரைச் சேர்ந்த செந்தில் வேலின் பெரியம்மா மகனான ராஜ்குமார் (31) என்பவர் தன்னிடம் வாங்கிய பணத்தை திரும்ப பெறுவதற்குவதற்காக காரில் கடத்திச் சென்ற வழக்கில் விரைந்து செயல்பட்டு கடத்தப்பட்ட நபரை மீட்டு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கைதுசெய்ய உதவியாக இருந்த மதுரை தல்லாகுளம் காவல் நிலைய காவலர்கள் விக்னேஷ் குமார், சேக் அப்துல் காதர் , சுந்தரமூர்த்தி, பிரதீப் குமார் மற்றும் காமராஜ் ஆகியோரின் சிறப்பான பணியை பாராட்டி தமிழ் நாடு காவல்துறை தலைமை இயக்குனர் மற்றும் படைத்தலைவர் சங்கர் ஜீவால் சான்றிதழ் மற்றும் பண வெகுமதி அளித்து பாராட்டினார்கள்.

## மீனாட்சி மருத்துவமனை நடத்திய மாபெரும் இஃப்தார் கொண்டாட்டம் மத ஒருமைப்பாட்டு நிகழ்வில் 2000க்கும் அதிகமானோர் பங்கேற்பு

தஞ்சாவூர், மார்ச் 28

சமூக நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் ஊக்குவித்து கொண்டாடும் விதத்தில் ஒரு சிறப்பான இஃப்தார் விருந்தை மீனாட்சி மருத்துவமனை ஏற்பாடு செய்து நடத்தியது. இதில் பல்வேறு பின்புலங்களைச் சேர்ந்த 2000 ஞ க்கும் அதிகமானோர் பங்கேற்றனர். இஸ்லாமியர்களுக்கு புனித மாதமான ரமலான் நோன்பின்போது பல்வேறு சமயங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் ஊக்குவிப்பதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.




இஃப்தார் விருந்தின்போது, பாரம்பரியமான பரிமாறப்படும் உணவுகள் இந்நிகழ்வில் இடம்பெற்றது.

இஃப்தார் விருந்து நிகழ்வில் தலைமை விருந்தினராக மகாராஜா சில்க்ஸ் - மஹால் நிறுவனத்தின் உரிமையாளர் முகமது ரஃபி கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்திய இவான்ஜெலிக்கல் லுத்தரன் ஆலயத்தின் பாஸ்டர் ஜேக்கப் ஜெயராஜ் உட்பட, கிறிஸ்தவ மற்றும் இந்து சமயத்தைச் சேர்ந்த முக்கியமான தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டது சமய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. இந்நிகழ்வில் சிறப்புரை வழங்கிய மக்கள் தொடர்பு அதிகாரி மணிவாசகம், ஒற்றுமையின் முக்கியத்துவம் குறித்த செய்தியை வலியுறுத்தினார். ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரியான அல்மாஸ் அலி மற்றும் மீரா பஸ் உரிமையாளர் சர்ஃபுதீன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

சந்தையாக்கலுக்கான பொது மேலாளர் சிவக்குமார், இஃப்தார் விருந்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்பு சலுகையை வழங்கும் பிரிவிலேஜ் அட்டைகளை வினியோகித்தார். இயக்க செயல்பாடுகளுக்கான பொது மேலாளர் (பொறுப்பு) செல்வபாண்டி, மருத்துவமனையின் அழைப்பை ஏற்று பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

இந்நிகழ்வின்போது தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையின் தலைவர் டாக்டர். எஸ். குருசங்கர் கலந்து கொண்டு அவரது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார். "இதுபோன்ற நிகழ்வுகளே ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் கனிவான கருணையின் சக்தியை நமக்கெல்லாம் வலுவாக நினைவூட்டுகின்றன. உடல்நல சிகிச்சை என்பதையும் கடந்து, பிணைப்புகளை மேலும் வலுவாக்குவதிலும் கருணையின் உண்மையான மதிப்பீடுகளை செயல்பாட்டில் பிரதிபலிக்கவும் ஒருவர் மற்றொருவருக்கு ஆதரவாக இருப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதிலும் நாங்கள் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை இந்நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது." என்று டாக்டர். எஸ். குருசங்கர் தனது உரையில் குறிப்பிட்டார்.

## சிவகங்கை மாவட்டம் அரசு நிலங்கள் தேசிய நெடுஞ்சாலைகளில் கொடிக்கம்பங்களை அகற்ற மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தல்

சிவகங்கை, மார்ச்.28

தமிழ்நாட்டில் பொது பயன்பாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இதர அரசு நிலங்களில், அரசியல் கட்சிகள் சார்பாகவும், இதர சாதி, சமய, சங்கங்கள் சார்பாகவும் எழுப்பப்பட்டுள்ள கொடிக் கம்பங்களை அகற்றுமாறு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை கீறி(விஞி) 29035, 29217,



30354/2024 ஆகியவற்றின் 21.01.2025 நாளிட்ட தீர்ப்பில் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் தீர்ப்பினை அமல் படுத்தும் வகையில், சிவகங்கை மாவட்டத்தில் அரசு நிலங்களில் குறிப்பாக தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இதர அரசு நிலங்களில், அரசியல் கட்சிகள் சார்பாகவும், இதர சாதி, சமய, சங்கங்கள் சார்பாகவும் எழுப்பப்பட்டுள்ள கொடிக் கம்பங்களை 26.03.2025 ஆம் தேதி முதல் 15 தினங்களுக்குள் அந்தந்த அமைப்பினர் தங்களது சொந்த செலவில் அப்புறப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு கொடிக்கம்பங்களை அகற்றத் தவறும் பட்சத்தில், அரசு சார்பாக கொடிக்கம்பங்கள் அகற்றப்படும்.

மேலும், அவ்வாறு கொடிக்கம்பங்களை அகற்றுவதற்கு ஆகும் செலவு சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது அமைப்புகளிடமிருந்து வசூல் செய்யப்படும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## முடிச்சூரில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா

முடிச்சூர் மார்ச் 28

முடிச்சூரில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் புனித தோமையர் மலை ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா தலைமை ஆசிரியர் விஜய பாரதி தலைமையில் வெகு விமர்சியாக நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக முடிச்சூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் விநாயகமூர்த்தி முடிச்சூர் வார்டு உறுப்பினர்கள் ரமேஷ், குமார் ஆகியோர் கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி சிறப்புரை ஆற்றி தொடங்கி வைத்தனர் ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் கலை நிகழ்ச்சியை கண்டு



மகிழ்ந்தனர்.


அதனை தொடந்து விழாவில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு பரிசு பொருட்களை வழங்கி பாராட்டினார்கள் மேலும் முடிச்சூர் ஊராட்சி சார்பில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் விநாயகமூர்த்தி பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் பெருமக்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் ஆண்டு விழாவை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..




மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் அரங்கில் 2025-2026 ஆம் ஆண்டு வரவு செலவு (பட்ஜெட்) திட்ட அறிக்கையினை மேயர் இந்திராணி பொன்வசந்த் வெளியிட்டார் அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம் உதகையில் மோட்டார் வாகன பழுது பார்க்கும் கடைகள் நேற்று ஒரு நாள் மூடப்பட்டு மோட்டார் வாகன பழுது பார்க்கும் தொழிலாளர்கள் உதகை ஏடிசி பகுதியில் கவன ஈர்ப்பு போராட்டம் நடத்தினர். மோட்டார் வாகனங்கள் பழுது பார்ப்பதற்கு (வொர்க் ஷாப்) நிரந்தர இடம் தர வேண்டும் என்று கோரிக்கை எழுப்பினர். இதில் அனைத்து மோட்டார் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் உட்கோட்டம், பூலாங்குறிச்சி காவல் நிலையம், அதிரம்பட்டியைச் சேர்ந்த வெள்ளையன் என்பவர் கடந்த 20/3/2025 ஆம் தேதி பண்ணை வேலைகளுக்காகச் சென்றிருந்த நிலையில், மர்ம நபர் ஒருவர் அவரது வீட்டில் இருந்து சாவியை எடுத்து வீட்டிலிருந்து சுமார் 10 1/2 பவன் நகைகளை திருடியதாக வெள்ளையன் கொடுத்த புகாரின் பேரில் பூலாங்குறிச்சி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது. விசாரணையில் அதே ஊரைச் சேர்ந்த பெண் ஒருவர் வெள்ளையன் வீட்டு சாவியை எடுத்து வீட்டிலிருந்த 10 1/2 பவன் நகைகளை திருடிச் சென்றுள்ளது தெரியவந்து, போலீசார் அப்பெண்ணை கைது செய்து நகைகளை பறிமுதல் செய்தனர்.

## திருப்பூர் புதிய பேருந்து நிலையத்தில் ஆதரவற்ற நிலையிலிருந்த சிறுவன் மீட்பு! தகவல் தெரிவிக்க ஆட்சியர் அறிவுறுத்தல்

திருப்பூர், மார்ச்.28

திருப்பூர் மாநகரம் புதிய பேருந்து நிலையத்தில் ஆதரவற்ற நிலையிலிருந்த சஞ்சய்(3)என்கிற சிறுவன் தந்தை தாயை பிரிந்து தவித்துகொண்டிருந்தார் அச்சமயத்தில் பொதுமக்கள் திருப்பூர் குழந்தைகள் மையத்திற்கு தகவல் அளித்ததின்பேரில் விரைந்து வந்த குழந்தைகள் உதவி மைய பணியாளர்கள் அச்சிறுவனை மீட்டு திருப்பூர் குழந்தைகள் நலக் குழுவில் முன்னிலைபடுத்தப்பட்டு குழந்தைகள் நலக்குழுவின் ஆணைப்படி சிறுவனை தற்காலிக பராமரிப்பிற்காக15வேலம்பாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் டிஸ்ஸோ குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தில் தற்காலிகப் பராமரிப்பிற்கு விடப்பட்டு குழந்தைகள் நல குழு அறிவுறைப்படி சஞ்சையை குழந்தைகள் நலக்குழுவில் முன்னிலைபடுத்தப்பட்டு நல குழுவின் ஆணைபடி சிறுவனின் வயது (5)க்கு குறைவாக இருப்பதினால் பாதுகாப்பு பராமரிப்பிற்காக ஈரோடு மாவட்டம் ஹெல்பிங் ஹார்ட்ஸ் சிறப்பு தத்தெடுப்பு மையத்தில் ஒப்படைக்கப்பட்டார். மேற்படி குழந்தைகள் குறித்து தகவல் தெரிந்தவர்கள் 30 நாட்களுக்குள் நேரில் வரவேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் அக் குழந்தை சட்டப்படி தத்துகொடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்தார்.





மதுரை மாவட்டம் காந்தி அருங்காட்சியகம் அருகே உள்ள பூங்கா முருகன் கோயில் மண்டபத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக நகர்புற வாழ்வாதார இயக்கம், மாவட்ட வழங்கல் விற்பனை சங்கம் இணைந்து நடத்தும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிப்பு பொருட்களின் மாவட்ட அளவிலான வாங்குவோர் மற்றும் விற்போர் சந்திப்பு கூட்டம் நிகழ்ச்சியின் கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா இ.ஆ.ப., பார்வையிட்டார். மகளிர்திட்டம் தமிழ்நாடு மாநில ஊரகநகர்புற வாழ்வாதார இயக்கம் இணை இயக்குநர் தமிழரசி உடன் உள்ளார்.

## தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் விளையாட்டு விழா





தேவகோட்டை மார்ச் 28

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் கல்லூரியின் 55 ஆம் ஆண்டு விளையாட்டு விழா கல்லூரித் தலைவர் அண. லெட்சுமணன் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. பொருளியல் துறைத் தலைவர் முனைவர் பரமசிவன் வரவேற்றார். விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கத் துணைத் தலைவரும் திண்டுக்கல் ஸ்ரீ மகரிஷி வித்யா மந்திர் பள்ளியின் நிறுவுநருமான கோதைச்செல்வன் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். சிறப்பு அழைப்பாளர்களாக தேவகோட்டை நகர் மன்றத் தலைவர் சுந்தரலிங்கம் நகர்மன்றத் துணைத் தலைவர் ரமேஷ் நகர் மன்ற உறுப்பினர்கள் ஐயப்பன் வீரபாண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர். மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோதைச்செல்வன் 35 ஆண்டுகளுக்கு முன் இக்கல்லூரியில் தான் படிக்கும் போது பெரிய வசதிகள் ஏதுமின்றிப் படித்தேன். இருப்பினும் இக்கல்லூரி தந்த கல்வியால் ஒரு பள்ளியை நிர்வகிக்கும் ஆற்றலை பெற்றிருக்கிறேன் எனப் பேசினார். மேலும் அவர் கூறுகையில் தற்போது நம் கல்லூரியில் கிடைக்கும் வாய்ப்புகளை மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

ஆகவே அதற்கு உறுதுணையாக நான் பயின்ற இக்கல்லூரியின் உடற்கல்வித் துறைக்கு இருபதாயிரம் ரூபாய் நன்கொடை வழங்குகிறேன் இதனை விளையாட்டுத் துறை மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். விழாவில் வாழ்த்துரை வழங்கிய கல்லூரியின் சுயநிதிப் பிரிவு இயக்குனர் பேராசிரியர் அருணாசலம் விளையாட்டுத் துறைக்கும் நம் கல்லூரிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. நம் கல்லூரி தொடங்கிய நாள் முதல் இன்று வரை பல்கலைக்கழக அளவிலே பெருமை படைத்த கல்லூரியாக நம் கல்லூரி திகழ்கிறது. இப்பணியினைச் சிறப்பான முறையில் செய்து வரும் விளையாட்டுத் துறைக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். அணிவகுப்பு மரியாதைக்கான முதற்பரிசை வணிகவியல் துறை சுயநிதிப் பிரிவும் இரண்டாம் பரிசினை வணிக மேலாண்மைத் துறையும் மூன்றாம் பரிசினை வணிகவியல் துறையும் 2024 2025 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் கல்லூரியின் வணிகவியல் துறை சுயநிப் பிரிவு மாணவர்கள் வென்றனர். கல்லூரி உடற்கல்வி இயக்குனர் முனைவர் லூர்துராஜ் இவ்விழாவில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை வாசித்து இந்த ஆண்டில் கல்லூரியின் மூலம் பயிற்சி பெற்றுப் பல்கலைக்கழக தடகளம், கூடைப்பந்து. கொக்கோ, மற்றும் கைப்பந்து போட்டிகளுக்கான விளையாட்டு வீரர்களாகத் தேர்வான இருபத்திரண்டு மாணவர்களை அறிமுகம் செய்து வைத்தார். மேலும் இக்கல்லூரியில் பயின்று விளையாட்டுத் துறையின் மூலமாக தமிழ்நாடு காவல்துறையில் தற்போது பணி நியமனம் பெற்றுப் பணியாற்றி வரும் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் ஆரோக்கியசாமி வைத்தீஸ் முகிலன் கௌரவிக்கப்பட்டனர். விழாவில் கல்லூரியின் கல்லூரியின் பேராசிரியர்கள் அலுவலர்கள் மற்றும் மாணவ மாணவியர் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தேனியில் புதிய தமிழகம் கட்சி சார்பில் நிர்வாகிகள் கருத்துக்கேட்பு கூட்டம்



தேனி மார்ச் 28

தேனி மாவட்ட புதிய தமிழகம் கட்சி சார்பில் இட ஒதுக்கீடு மீட்பு மற்றும் மாஞ்சோலை மலையக மக்கள் வாழ்வுரிமை மீட்பு குறித்து நிர்வாகிகள் கருத்து கேட்பு கூட்டம் தேனி இன்டர்நேஷனல் ஹோட்டலில் புதிய தமிழகம் கட்சி நிறுவனர் மற்றும் தலைவர் மருத்துவர் கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சிவக்குமார் முன்னிலை வகித்தார். இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அருந்ததியினருக்கு வழங்கிய உள் ஒதுக்கீட்டை ரத்து செய்யக் கோரியும், திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலையில் மலையக தேயிலைத் தோட்ட தொழிலாளர்களை வெளியேற்ற துடிக்கும் திமுக அரசு கை விடக்கோரியும் மற்றும் 7வது மாநில மாநாடு டிசம்பர் அல்லது ஜனவரி மாதத்தில் நடத்தவது அதற்கு புதிய தமிழகம் கட்சியினர் குடும்பம் குடும்பமாக கலந்து கொள்ள வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பால சுந்தரராஜ், நாகேந்திரன், வேல்மணி, அய்யனார், முருகன், கோம்பை பேரூராட்சி மன்ற உறுப்பினர் அழகேஸ்வரி சோனை கருப்பசாமி, பெருமாள் மலைச்சாமி, சண்முகவேல், மாடசாமி, தேவேந்திர கண்ணன், குமார், சொக்கர், அஜித், ஆண்டிச்சாமி, சூரிய பிரகாஷ் உள்பட கட்சி நிர்வாகிகள், மகளிர் அணி, இளைஞர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.

## வாடிப்பட்டி தாலுகாவில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தில் ஆட்சியர் ஆய்வு



வாடிப்பட்டி, மார்ச்.28

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலூ காவில் நேற்று மாவட்ட கலெக்டர் சங்கீதா உங்களைத் தேடி உங்கள் ஊரில்திட்டத்தின் கீழ் ஒரு நாள் முழுவதும் தங்கி பல்வேறு அரசுத் திட்டப் பணிகளை ஆய்வு செய்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார். தமிழ்நாடு அரசின் திட்டங்கள் பொதுமக்களுக்கு முழுமையாக சென்றடையும் வகையில்பல்வேறுநடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் உங்களைத் தேடி உங்கள் ஊரில்திட்டத்தின் கீழ் மாவட்ட கலெக்டர்கள் ஒரு நாள் முழுவதும் தாலுகா அளவில் தங்கி திட்டப் பணிகளை ஆய்வு செய்து பொது மக்களிடம்மனுக்களை பெற்று தீர்வு காண வேண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதா நேற்று வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்தில் பல்வேறு துறையைச் சேர்ந்த அதிகாரிகளை தாலுகா அளவில் உள்ள 77 கிராமங்களில் உள்ள அரசு அலுவலகங்கள், பள்ளிக் கூடங்கள் மருத்துவமனைகள், காவல் நிலையம், ஊட்டச்சத்து மற்றும் சத்துணவு மையங்கள் உள்ளிட்டவைகளையும், வளர்ச்சி திட்ட பணிகளையும் ஆய்வு செய்ய உத்தரவிட்டார். அதன்பின்கச்சை கட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின்செயல்பாடு குறித்து ஆய்வு செய்தார். அப்போது சிகிச்சைக்காக வந்திருந்தபொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். இரும்பாடி அரசு மேல்நிலைப்பள்ளி யில் பள்ளி குழந்தைகளுக்கு சத்து ணவு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்தும், குடிநீர், கழிப்பறை வசதிகள் பரா மரிப்பு பள்ளியின் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்தும் ஆய்வுசெய்தார். அங்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பயனாளி மூலம் கட்டப்பட்டு வரும் வீடு கட்டுமான பணிகளையும் அரசு நூலகத்தை யும் பார்வையிட்டார். பின் ஆதனூ ரில் வேளாண் வணிகத்துறை சார்பாக ஒற்றை சாளர தகவல் மற்றும் நுண்ணறிவு மையத்தை தொடங்கி வைத்து மரக்கன்று நடவு செய்து விவசாயிகளிடம் கோரிக்கைமனுக்களை பெற்றார்.

அதன் பின்பு அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் உள்ள கலை ஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில் உள்ள கூட்டரங்கில உங்களைத் தேடிஉங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் ஆய்வு பணி செய்த அனைத்துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இரவு 7 மணிக்கு வாடிப்பட்டி தாலுகாஅலுவலகத்தில் பொதுமக்களிடமிருந்து 148 கோரிக்கைமனுக்களை பெற்றார். இரவு 8 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு அலங்காநல்லூர் கேட்டு கடையில் உள்ள முதல்வர் மருந்தகத்தை ஆய்வு செய்தார். காலை 7.30 மணிக்கு மரியம்மாள்குளத்தில் உள்ள ஆவின் பால் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டார். 8 மணிக்கு சின்ன இலந்தைகுளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் காலை உணவு திட்டத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். 9 மணிக்குபுறப்பட்டுச் சென்றார். உடன்மாவட்ட வருவாய் அலுவலர்அன்பழன், வருவாய் கோட்டாட்சியர் சாலினி, தாசில்தார் ராமச்சந்திரன், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் பார்த்திபன், மற்றும் தலைமை இடத்து துணை தாசில்தார் அருள்மதி, மண்டல துணை தாசில்தார்கள் புவனேஸ்வரி, மௌட்பேட்டன், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் வந்திருந்தனர்.

## திருப்பூரில் முன்னாள் படைவீரர் நலத்துறை வாயிலாக முன்னாள் படைவீரர் - சார்ந்தோருக்கு புற்றுநோய்-தொழுநோய் சிறப்பு முகாம்



திருப்பூர், மார்ச்.28

முன்னாள் படைவீரர் நலத்துறை வாயிலாக முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோரில் மனநலம் பாதிக்கப்பட்டோர், காசநோய், மாற்றுத்திறனாளி, புற்றுநோய், பக்கவாதம் மற்றும் தொழுநோய் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து மாதந்தோறும் ரூ.5000/ முதல் ரூ.7000/ வரை நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருப்பூர் மாவட்டத்திலுள்ள முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோர்கள் இத்திட்டம் குறித்து அறிந்து பயன்பெறும் வகையிலும் மருத்துவ நிதியுதவி பெற தகுதியுள்ள பயனாளிகளை கண்டறிந்து நிதியுதவியினை விரிவுபடுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, 03042025 அன்று முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் கீழ்க்காணும் பரிசோதனைகள் செய்யப் படவுள்ளது.

1. புற்றுநோய் கண்டறிதல், 2. எலும்புருக்கி நோய்கள் கண்டறிதல், 3. பக்கவாத நோய் கண்டறிதல்

4. மனநல பாதிப்புகள் கண்டறிதல், 5. ஞிகீகிஸிதி கண்டறிதல் (வளர்ச்சியின்மை).

மேலும் விவரங்களுக்கு திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர்கள் நல அலுவலக தொலைபேசி எண். 04212971127 மற்றும் மின்னஞ்சல் முகவரி exweltup@tn.gov.inக்கு தொடர்பு கொள்ளலாம்.

எனவே, திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோர் இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு அதிக அளவில் பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தா. கிறிஸ்துராஜ், தெரிவித்துள்ளார்கள்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161